# மாலை முரசு

பக்கங்கள் 16 + 02

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 17 வியாழக்கிழமை 01.01.2026 | அதிர்வு 155


## கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரி வாகனம் மோதி பலி


### புத்தாண்டில் சோகம்



வாகனப் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் போக்குவரத்துப் 03


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## புத்தாண்டை முன்னிட்டு தலதா மாளிகையில் ஜனாதிபதி வழிபாடு

### மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து ஆசி பெற்றார்

புத்தாண்டை முன்னிட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகைக்கு இன்று காலை விஜயம் செய்து வழிபாட்டில் ஈடுபட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க , மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து ஆசி பெற்றார்.

இன்று காலை வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகைக்குச் சென்ற ஜனாதிபதி, தலதா மாளிகை வளாகத்தில் நடைபெற்ற மத வழிபாடுகளில் பங்கேற்றதோடு, புத்தாண்டை முன்னிட்டு தலதா மாளிகையைத் தரிசிக்க வந்த மக்களுடன் சுமுகமான உரையாடலில் ஈடுபட்டார். 02



# சஜித் தலைவர் ரணில் ஆலோசகர்

### இணைந்து பயணிக்க ஹறின் புதிய யோசனை

“ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஒன்றிணைவது உறுதியாகியுள்ளது. சஜித் பிரேமதாஸவின் தலைமையின் கீழ், ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையுடன் இணைந்து பயணிக்க வேண்டும்.”

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்தார். 03

## புத்தாண்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து,மல்வத்து விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மல்வத்து மகாநாயக்க தேரர் அதி வணக்கத்துக்குரிய திப்பெட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரைச் சந்தித்து, அவரது நலம் விசாரித்ததோடு அவருடன் சிறு கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மல்வத்து மகா விஹாரையின் பிரதிப் பதிவாளர், ராஜகீய பண்டித தர்ஷனபதி வணக்கத்துக்குரிய மகாவெல ரத்தனபால நாயக்க தேரரும் இந்தச் சந்திப்பில் இணைந்து கொண்டார். பிரித் பாராயணம் செய்த மகாசங்கத்தினர் ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர்.

மல்வத்து மகா விஹாரையின் அனுநாயக்க தேரர் அதி வணக்கத்திற்குரிய திம்புல்கும்புரே விமலதம்ம தேரரையும் ஜனாதிபதி சந்தித்து நலம் விசாரித்தார்.

அதனையடுத்து, அஸ்கிரி மகா விஹாரைக்கு சென்ற ஜனாதிபதி, அஸ்கிரி மகா விஹாரையின் மகாநாயக்க தேரர் அதி வணக்கத்துக்குரிய வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரரைச் சந்தித்து சிறு கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

உதயமான புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதிக்கு ஆசி தெரிவித்த அஸ்கிரி மகாநாயக்க தேரர், மக்களுக்குச் சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி தலைமையிலான புதிய அரசு முன்னெடுக்கும் திட்டங்களை புத்தாண்டில் புதிய பலத்துடன் செயற்படுத்த வாழ்த்துத் தெரிவித்தார்.

தொடர்ந்து, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அஸ்கிரி தரப்பு அனுநாயக்க தேரர் அதி வணக்கத்துக்குரிய நாரம்பனாவே ஆனந்த தேரரைச் சந்தித்து, அவருடன் சிறிது நேரம் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட வரலாற்றில் மிக மோசமான இயற்கை அனர்த்த சவாலை எதிர்கொள்ள அரசு செயற்படுத்திய திட்டம் குறித்து ஜனாதிபதி மல்வத்து மற்றும் அஸ்கிரி மகாநாயக்க தேரர்கள் மற்றும் அனுநாயக்க தேரர்களுக்கு தெளிவுபடுத்தியதோடு இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக தொடர்வதற்கு மகாசங்கத்தினர் தமது ஆசிகளைத் தெரிவித்தனர்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன, நாடாளுமன்ற உறுப்பினர் தனுர திஸா நாயக்க உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.
















# யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் புதுவருட கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு



(எஸ்.நிதர்ஷன்)

2026 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு இன்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. தொடர்ந்து சத்தியப்பிரமாணம் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையில் நடைபெற்ற சந்திப்பு தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே ஹரின் பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் நடைபெற்ற சந்திப்பு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கும். இது பற்றி கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு அவர் தெரியப்படுத்துவார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஒன்றிணைந்தாலும் பொது விடயங்களின்போது ஏனைய கட்சிகளையும் இணைத்துக்கொண்டு கூட்டுப் பயணம் இடம்பெறும். மீண்டும் நாடாளுமன்றம் வருவதில் ரணில் விக்கிரமசிங்க ஆர்வம் காட்ட வில்லை. வலுவானதொரு கூட்டு எதிர ணியை உருவாக்கவே அவர் முற்படு கின்றார்.

எனவே, சஜித்தின் தலைமையின் கீழ் ரணிலின் ஆலோசனையுடன் இணைந்து பயணித்தால் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு அரசியல் ரீதியில் சவால் விடுக்கக் கூடியதாக இருக்கும்." - என்றார்.

## கடமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு அதிகாரி ஒருவர் வான் மோதி பலியாகியுள்ளார். மேலும் ஒரு பொலிஸ் அதிகாரி காயமடைந்துள்ளார்.

அம்பலாங்கொடை நகரில் இன்று அதிகாலை 2.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு பொலிஸ் அதிகாரிகள், அம்பலாங்கொடை நகரில் வாகனப் பரிசோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த வான் ஒன்றை நிறுத்துவதற்குரிய சமிக்ஞையை அவர்கள் வெளிப்படுத்தினர்.

அவ்வேளையிலேயே இரு அதிகாரிகளையும் மோதித் தள்ளிவிட்டு வானில் சென்றவர்கள் தப்பியோடியுள்ளனர். அம்பாந்தோட்டை பகுதியை நோக்கியே அண்ட் வான் சென்றுள்ளது.

இந்நிலையில் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்குரிய விசாரணை வேட்டை ஆரம்பமாகியுள்ளது.

சரத் என்ற பொலிஸ் கான்ஸ்டபிளே உயிரிழந்துள்ளார். மற்றையவர் அம்பலாங்கொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விவஸ்தையற்ற விளக்கம்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடாக புதிய சட்டம் ஒன்று கொண்டு வரப்படுவது குறித்து நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மீண்டும் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

''பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை நீக்கி, உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக அம்சங்கள் மற்றும் மனித உரிமைகளை உள்ளடக்கிய வகையில் புதிய சட்டம் ஒன்றை இயற்றுவோம் என்று மக்களுக்கு வாக்குறுதியளித்தோம்.

''இதற்கமைய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது குறித்து ஆராய்ந்து விதப்புரைகளை முன்வைப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ குலரத்ன தலைமையில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. புதிய சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மீதான விமர்சனங்கள், குறைபாடுகள் புதிய சட்டத்தில் உள்வாங்கப்படாது. குறைபாடுகளை முன்வைப்பவர்கள் சிறந்த பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும். புதிய சட்டத்தில் மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும். சகல விடயங்களுக்கும் குறைகளை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருந்தால் எந்த பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது.''- என்று அவர் கூறியிருக்கின்றார்.

அவரது இந்தக் கருத்து குறித்து சில விடயங்களை அப்பட்டமாகச் சுட்டிக் காட்ட வேண்டிய தேவை எழுந்திருக்கின்றது.

''பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை நீக்கி உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக அம்சங்கள் மற்றும் மனித உரிமைகளை உள்ளடக்கிய வகையில் புதிய சட்டம் ஒன்றை இயற்றுவோம் என்று மக்களுக்கு வாக்குறுதி அளித்தோம்'' - என்று அவர் கூறிய விடயம் அப்பட்டமான பொய். மாற்றீடு இல்லாமல் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை அடியோடு இல்லாதொழிப்போம் என்பதுதான் ஆட்சிக்கு வரும் வரை இப்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினதும், அவரது தேசிய மக்கள் சக்தியினதும் கருத்தாக இருந்தது. நிலைப்பாடாகத் தொடர்ந்தது. ஆனால் பதவிக்கு வந்ததும் அதிகார வர்க்கத்துக்கு அடிபணிந்து, தனது கருத்தை மாற்றி, மாற்றீட்டுச்சட்டத்தைக் கொண்டு வர அநுர அரசு தீர்மானித்தது என்பதுதான் உண்மை. அரசு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி வேறு, இப்போது செய்கின்ற நடவடிக்கை வேறு என்பது முதலில் தெளிவாக நோக்கப்பட வேண்டும்.

அடுத்தது - புதிய மாற்றீட்டுச்சட்ட வரைவில் உள்ள குறைபாடுகள் குறித்து சுட்டிக் காட்டப்படுவதை ''குறைகளை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருந்தால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது'' - என்று அமைச்சர் கூறுகின்ற விடயம்.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை முழுமையாக ஒழிப்போம் என்றவர்கள் இப்போது அதில் உள்ள குறைகளை நீக்குவோம், களைவோம் என்ற தரத்துக்கு இறங்கி விட்டார்கள். அந்த குறைகளைத் திருத்தும் விடயத்தில் குறைகள் பற்றித்தானே பேச வேண்டும், அவற்றைப் பற்றித் தானே சுட்டிக் காட்ட வேண்டும்? குறைகளை திருத்தும் விடயத்தில் குறைகளை கவனிக்காமல் விடும்படி அவர் கூறுவது முட்டாள்தனமான கூற்றாகத்தான் தெரிகிறது.





# பசறை யூரி தமிழ் வித்தியாலய தளபாடங்கள் இடம்மாற்றப்பட்டன

**(நடராஜா மலர்வேந்தன்)**

டித்வா சூறாவளி பேரிடரின் தாக்கத்தால் பாடசாலை கட்டடங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்ட பசறை யூரி தமிழ் வித்தியாலய ஆரம்பப் பாடசாலையின் கதிரைகள், மேசைகள் உள்ளிட்ட பௌதிக கற்றல் வளங்கள் இடம்மாற்றப்பட்டுள்ளன.

பெல்காதன்ன வித்தியாலய சிங்கள மொழி மூல பாடசாலைக்கு இவை கொண்டு செல்லப்பட்டுள்ளன.

அனர்த்தத்தின் பின்னர் இந்தப் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை எதிர்வரும் ஐந்தாம் திகதி முதல் தற்காலிகமாக பெல்காதன்ன சகோதர பாடசாலை கட்டடமொன்றில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலைக்கான புதிய கட்டடங்கள் பாதுகாப்பான இடத்தில் அமைக்கப்படவுள்ளது. பாதிப்புக்குள்ளான குறித்த பாடசாலைக்கு அண்மையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கண்காணிப்பு விஜயம்மேற்கொண்டமையும்குறிப்பிடத்தக்கது.



# வெளிநாடு வாழ் பணியாளர்களது குடும்பத்தினருக்கு மருத்துவ முகாம்

**(பாறுக் ஷிஹான்)**

வெளிநாடு வாழ் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான விசேட மருத்துவ முகாம் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் அனுசரணையுடன் சம்மாந்துறை பிரதேசத்தில் வசிக்கும் வெளிநாட்டில் பணிபுரிபவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினரும் இந்த முகாமில் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் பிரபா சங்கர் ஒழுங்கமைப்புடன் நடைபெற்ற இந்த முகாமில் பயனாளிகளுக்குப் பல்வேறு மருத்துவச்




சேவைகள் வழங்கப்பட்டன.

இதன்போது பொது வைத்திய பரிசோதனைகள், விசேட மருத்துவ ஆலோசனைகள், பற்சுகாதாரப் பரிசோதனைகள் என்பன நடைபெற்றன.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நௌசாத் முஸ்தபா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கண் காணிப்பு மற்றும் மதிப்பீடு பிரிவின் பொறுப்பதிகாரி டாக்டர் எம்.சி.எம். மாஹீர், டாக்டர் (திருமதி) எம்.ஐ. நஸீரா, பல் வைத் திய நிபுணர் எம்.எம். பைரூஸ் ஆகியோர் கலந்து இதில் கொண்டனர்.



# செம்பியன்பற்று வடக்கு பிலிப்பு நேரியார் ஆலய புது வருடப் பிறப்பு திருப்பலி நிகழ்வு

(பூ.லின்ரன்)

செம்பியன் பற்று வடக்கு புனித பிலிப்பு நேரியார் ஆலய புது வருடப் பிறப்பு திருப் பலி நிகழ்வுகள் விசேடமாக இடம்பெற்றன.

யாழ். மறைமாவட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க செம்பியன் பற்று பங்கின் உலக பிரசித்தி பெற்ற செம்பியன் பற்று வடக்கு புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் 2026 விசேட திருப்பலி நேற்று நள்ளிரவு இடம்பெற்றது.

இலங்கை முழுவதும் இருந்து அதிக பக்தர்கள் வருகை தரும் இந்த ஆலயத்தில் நேற்று இரவு 11 மணியளவில் திருச்செபமாலையுடன் 11.50 மணியளவில் செம்பியன் பற்று பங்கு தந்தை ஜஸ்டின் ஆதர் தலைமையில் திருப்பலி ஆரம்பமாகி அதிகாலை 1.30 மணியளவில் திருப்பலி நிறைவு பெற்றது .

திருப்பலியில் பொது மக்கள், வட மராட்சி கிழக்கு பகுதியில் இயங்கும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அருட்தந்தை யினர், அருட்சகோதரியினர் கலந்து கொண்டனர்.



# கடல் கொந்தளிப்புக் காரணமாக திருமலைக் கடற்கரை மூடப்பட்டது!

திருகோணமலையில் கடல் கொந்தளிப்பால் திரு கோணமலை கடற்கரை மூடப்பட்டுள்ளது. இதனை எச்சரிக்கும் விதமாக சிவப்புக் கொடியும் ஏற்றப்பட்டுள்ளது.

இங்கு கடல் அலைகளின் வேகமும் அதிகரித்துக் காணப் படுகிறது. கால நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் இவ்வாறான தாக்கங்களை செலுத்தியுள்ளன.

திருகோணமலைப் பகுதியில் மப்பும் மந்தாரமுமான கால நிலை நிலவுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# மன்னார் செபஸ்தியார் பேராலயத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில திருப்பலி!

**(மன்னார் நிருபர் எஸ். ஆர்.லெம்பேட்)**

மன்னார் மறை மாவட்டத்தில் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

2026 ஆம் ஆண்டு தூய ஆவியானவரின் ஆண்டாக பிரகடனப் படுத்தப்பட்ட நிலையில் நேற்று இரவு 11.30 மணியளவில் மன்னார் தூய செபஸ்தியார் பேராலய வளாகத்தில் அமைக்கப்பட்ட பெயர் பலகையை மன்னார் மறைமாவட்ட ஆயர் திரை நீக்கம் செய்து வைத்தார்.

அதனை தொடர்ந்து நேற்று இரவு 11.45 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலி யாக ஒப்புக் கொடுத்தனர்.

இதன்போது ஆலயத்துக்குப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசேட பாதுகாப்பை வழங்கியிருந்தனர்.

மேலும் குறித்த புத்தாண்டு நள்ளிரவு திருப்பலியில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.











# மட்டக்களப்பு - கொழும்புக்கான ரயில் சேவையில் குறைபாடு!

## சிறிநேசன் எம்.பி. விசனம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கும் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் ரயிலில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்று சிறிநேசன் எம்.பி. விசனம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து சேவையிலீடுபட்டு வந்த ரயில் பெட்டிகள் றொமேனியன் வகையைச் சேர்ந்தவையாகும். அந்த ரயில் சேவையில் 600 பயணிகள் பயணிக்கத்தக்க அளவு 10 பெட்டிகளை கொண்டமைந்துள்ளது. ஆனால் இப்போது அவை பவர் வகையைச் சேர்ந்த ரயில் பெட்டிகளாக மாற்றப்பட்டிருக்கிறன.

அதேவேளை ஏற்கனவே சேவையில் ஈடுபட்ட 10 பெட்டிகளில் 5 பெட்டிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இதன்காரணமாக 600 பேர் பயணிக்கத்தக்க சேவையில் ஈடுபட்டு வந்த புகையிரதம் இப்போது 350 பேர் பயணிக்கத்தக்கதாக குறைக்கப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமில்லாமல் தினமும் 10 லட்சம் ரூபாவை வருவாயாக உழைத்துக் கொண்டிருந்த இந்த மட்டக்களப்பு ரயில் சேவை தற்போதைய நிலையில் இரண்டில் லட்சத்திலிருந்து 3 லட்சம் வரையில்தான் உழைக்கக் கூடியதாக மாற்றப்பட்டிருக்கிறது.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மவாட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை இரவு மட்டக்களப்பு செட்டிபாளையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட



றொமேனியன் ரயில் வகையைச் சேர்ந்த ரயில் பெட்டிகளை மீண்டும் சேவைக்கு கொண்டு வரவேண்டும் என பயணிகள் வேண்டுகோள் விடுகின்றார்கள். அவ்வாறு அவற்றை சேவைக்கு கொண்டு வருவதால் மீண்டும் வழமை போல் 600 பயணிகள் பயணிக்கத்தக்கதாக இருக்கும். அது மட்டுமல்லாமல் முதலாம் வகுப்பு இருக்கை, இரண்டாம் வகுப்பு இருக்கை என்பனவும் அதில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன.

தற்போது இருக்கும் பவர்செக் ரயில் வகையைச் சேர்ந்த 5 ரயில் பெட்டிகளில் 350 பயணிகள்தான் பயணிக்கக்கூடிய நிலையில் காணப்படுகிறது. அதுமாத்திரம் மின்றி தற்போதைய பவர்செக் ரயில் சேவையை எடுத்துக் கொண்டால் அதில் தபால் சேவையில்லை, பொதி சேவை இல்லை என்பதோடு அங்கு சிற்றுண்டி வசதிகளும் இல்லாமல் உள்ளதால் பயணிகள் அதிகளவு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு கொழும்பு, கொழும்பு மட்டக்களப்பு ஆகிய ரயில் சேவைகள் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு மாத்திரம் இன்றி அம்பாறை மாவட்டத்திலுள்ள மக்களுக்கும் பயனுறுதி வாய்ந்ததாக காணப்படுகிறன. அதுபோல் பொலனறுவை மாவட்டத்திலிருந்து அதிகமான பயணிகளைக் கொண்டு செல்லும் ஒரு ரயில் சேவையாகவும் இது காணப்படுகின்றது. ரயில் சார்ந்து அல்லது போக்குவரத்துச் சார்ந்து இருக்கும் அமைச்சரிடம் இது தொடர்பில் கருத்தில் கொண்டு உடன் செயற்பட வேண்டும் என கோரிக்கை முன்வைக்கின்றேன்.

இந்த நிலையில் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் புறப்படும் ரயில் மாலை 7 மணிக்கு புறப்பட்டு அது மறுநாள் அதிகாலை மட்டக்களப்புக்கு வந்து சேர கூடியதாக இருந்தது. அவ்வாறு அதிகாலை வந்து சேருகின்ற போது அலுவலகங்களுக்கு செல்கின்றவர்களுக்கு அது அனுகூலமாக அமைந்திருந்தது. இப்போது கொழும்பிலிருந்து புறப்படுகின்ற ரயில் இரவு 11 மணிக்கு புறப்படுகின்றது. இதன் காரணமாக மறுநாள் காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பை வந்தடைகின்றது. எனவே இதனால் அலுவலகப் பணிகளுக்கு செல்வர்களுக்கு அசௌகரிகமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு சென்று கொழும்பிலிருந்து மீண்டும் மட்டக்களப்புக்கு வருவதற்கு ஒரே நாளில் முடிக்க வேண்டிய பணிகளை இரண்டு நாள்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது.

இதனால் அரச அலுவலர்களும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர். உத்தியோகஸ்தர்களுக்கும் பயணிகளுக்கும் இடையில் அடிக்கடி குழப்பகரமான சூழல் முரண்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதனை தீர்த்து வைக்குமாறு அமைச்சரிடம் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.- என்றார்.







# மாணவர்களுக்குக் கற்றல் உதவி!

(த.சுபேசன்)

கனடாவில் வசிக்கும் மனிதநேய சமூக செயற்பாட்டாளர் காமலிற்றா "கல்விக்கு கரம் கொடுப்போம்" எனும் செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் கே.கே.பி. இளைஞர் கழகத்துக்கு வழங்கிய நிதி பங்களிப்பில் சாவகச்சேரி மகிழங்கேணி கல்வி நிலையத்தில் கல்விகற்கும் 40 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி உதவித்திட்டத்தை யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழக அங்கத்தவர்கள் வழங்கி வைத்தனர்.




# சம்மாந்துறை பிரதேச சபையின் வருட இறுதி ஒன்றுகூடல்

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பிரதேச சபையின் வருட இறுதி ஒன்றுகூடல் சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர் தலைமையில் நேற்று புதன் கிழமை பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் யூ.எல்.அப்துல் மஜீட், சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஐ.எம்.இர்ஷாத்தின் சிறப்புரை நிகழ்த்தினார்.

இதன்போது ஓய்வு பெறும் மின்னிய லாளர் எம்.வீ. சுபைதீன் மற்றும் காவலாளி கே.எல். அப்துல் கபூர் ஆகியோருக்குப் பொன்னாடை அணிவித்து, நினைவுச் சின்னம் மற்றும் அன்பளிப்புகள் வழங் கப்பட்டன.





# முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் புதுவருட கடமை ஆரம்பிக்கும் நிகழ்வு!

(பா.சதீசன்)

2026 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு இன்று காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து வருடத்துக்கான முதல் நாள் கடமைகளை ஆரம்பிக்கும் அரச சேவை சத்தியப்பிரமாண நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமா மகேஸ்வரன் தலைமையில்நடைபெற்றது.

இதன்போது புதிய ஆண்டை வரவேற்று தமது கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக காலை 9 மணிக்கு மாவட்ட அரசா அதிபரால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்ட பின்னர், தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காகவும் பல்வேறு அனர்த்தங்களில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து, உத்தியோகத்தர்கள் அனைவரும் உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர்.



நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தனது கருத்துரையில், அரசாங்கத்தின் புதிய எண்ணக்கருக்களான வறுமையை ஒழித்தல், டிஜிற்றல் மயமாக்கல், கிளீன் ஸ்ரீலங்கா ஆகிய எண்ணக் கருத்துக்களை உள்ளடக்கியதாக சிறப்புரை ஆற்றினார். அண்மையில் நடைபெற்ற வெள்ள அனர்த்தத்தின் பாதிப்புக்கள் அவற்றில் இருந்து மீள் எழும் திட்டங்கள் தொடர்பிலும் கருத்துரைத்த அதேவேளை, இந்த வருடம் அனைவரது வாழ்வில் மிகுந்த சந்தோசங்களையும் வளங்களையும் கொண்டு வரவேண்டும் என்று கூறி புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்வில் மேலதிக மாவட்ட அரச அதிபர் திருமதி ச.மஞ்சுளாதேவி (நிர்வாகம்), மேலதிக மாவட்ட அரசா அதிபர் எஸ்.ஜெயக்காந் (காணி), பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட பிரதம கணக்காளர், மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர், பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிளைத் தலைவர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.







# தாராக்குடிவில்லு பகுதியில் விபத்தில் இருவர் காயம்!

**(உடப்பு நிருபர் க.மகாதேவன்)**

பத்துளுஓயா தாராக்குடிவில்லு பகுதியில் இன்று காலை வேளையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் தாயும், பிள்ளையும் பயணித்த மோட்டார் சைக்கிள் நொருங்கியது.

புத்தளம் பகுதியிலுருந்து பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் ஒரே திசையில் சென்ற வேளை, தாயும் மகளும் பயணித்து மோட்டார் சைக்கிளை வீடு வந்ததும் திருப்ப முற்பட்டவேளை, பின்னால் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த நபரின் கவனயீனத்தால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த தாய் மற்றும் மகள் முந்தல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மகள் மேலதிக சிகிச்சைக்காக புத்தளம் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார் என்று முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

தாய் சிறு காயத்துடன் முந்தல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.மோட்டார் சைக்கிளுடன் மோதிய இளைஞரை முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.





# சிட்னியில் புத்தாண்டு நிகழ்வு!

(வி.ரி.சகாதேவராஜா)

புலம் பெயர் தமிழர்கள் கணிசமான அளவு வாழும் ஆஸ்திரேலியாவில் புத்தாண்டு தின நிகழ்வுகள் ஆலய தரிசனத்துடன் இடம்பெற்றன.

நள்ளிரவில் வாண வேடிக்கைகள் நகரை ஆக்கிரமித்தன.

நள்ளிரவில் மட்டுமல்ல காலையிலும் சிட்னி முருகன் ஆலயத்தில் சனக்கூட்டம் அலைமோதியது.

சிட்னியில் இருந்து 60 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மின்றோ சிவன் ஆலயம், வெங்கடேஸ்வரா ஆலயம் மத்தியில் உள்ள மாதா ஆலயம் ஆகியன மக்களால் நிரம்பி வழிந தன.

அங்குள்ள 20 அடி உயர சிவன் சிலை பலரையும் ஈர்த்தது.






# பெங்களூரில் புத்தாண்டில் பலத்த பாதுகாப்பு:
## மது குடித்தவர்களை வீட்டில் இறக்கிவிட ஏற்பாடு

ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டங்கள் பெங்களூரில் கோலாகலமாக நடைபெறுகிறது. இதனால் 'பப்', 'கிளப்' போன்ற கேளிக்கை விடுதிகள், மதுபான கடைகள், உணவகங்கள் உள்ளிட்டவை நள்ளிரவு 3 மணி வரை திறந்து வைத்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால் மெட்ரோ ரயில், மாநகர பஸ் ஆகியவை நள்ளிரவு 3 மணி வரை இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

மாநகரம் முழுவதும் 20 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பெண்களுக்கு பாலியல் தொல்லை சம்பவங்களை தடுக்க 164 இடங்களில் உதவி மையங்களும், 10 ட்ரோன் கமராக்களும், 5 ஆயிரம் சி.சி.டி.வி. கமிராக்களும் அமைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த 2,600 போக்குவரத்து பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவோரை பிடிக்க 1000 இடங்களில் பொலிஸார் பாதுகாப்பு வளையங்கள் அமைத்துள்ளனர்.

கர்நாடக முதல்வர் சித்தராமையா நேற்று பெங்களூரில் துணை முதல்வர் டி.கே.சிவகுமார், உள்துறை அமைச்சர் பரமேஷ்வரா, பொலிஸ் உயர் அதிகாரிகள் ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டார். சுமார் 2 மணி நேரம் நடந்த உயர்நிலை ஆலோசனை கூட்டத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

உள்துறை அமைச்சர் பரமேஷ்வரா கூறுகையில்,

"மது குடித்துவிட்டு நிதானம் இல்லாமல் இருப்பவர்கள் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. எனவே அவர்கள் ஓய்வெடுக்க 15 இடங்களில் ஓய்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் குடித்துவிட்டு நடக்க முடியாதவர்களை, அவர்களின் முகவரியை கேட்டு பத்திரமாக வீட்டில் இறக்கிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில், பெண்கள், வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள், நோயாளிகள் உள்ளிட்டோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்." என்றார்.





# ‘ஒபரேஷன் சிந்தூர்’ தொடர்பான சீனாவின் கருத்துக்கு என்ன பதில்?

## பிரதமருக்கு காங்கிரஸ் கேள்வி

‘ஒபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கையின் போது மத்தியஸ்தம் செய்ததாக சீனா கூறியதற்கு என்ன பதில்? என பிரதமர் மோடியிடம் காங்கிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான ‘ஒபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கையை நிறுத்த, இந்தியா – பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தம் செய்ததாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தொடர்ந்து கூறி வருகிறார்.

இந்நிலையில், சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீ நேற்று அளித்த பேட்டியில், “இந்தாண்டில் சீனா தலையிட்ட முக்கிய விஷயங்களின் பட்டியலில் இந்தியா – பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட பதற்றமும் ஒன்று.” என குறிப்பிட்டார்.

இதுகுறித்து காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் எக்ஸ் தளத்தில் விடுத்துள்ள செய்தியில்,

“ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை மத்தியஸ்தம் செய்து நிறுத்தியதாக ஜனாதிபதி ட்ரம்ப் கூறிவரும் நிலையில், அதேபோன்ற கருத்தை சீன வெளியுறவுத் துறை அமைச்சர் கூறியுள்ளார். இது நாட்டின் பாதுகாப்பை கேலிக்கூத்தாக்குவது போல் உள்ளது.

அருணாச்சலப் பிரதேச விஷயத்தில் சீனா தொடர்ந்து எதிராக செயல்படுகிறது. இது போன்ற சூழலில் ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் சீனா ஆற்றிய பங்கு என்ன என்பது குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# திராவிடப் பொங்கலைக் கொண்டாட வேண்டும்: தொண்டர்களுக்கு ஸ்டாலின் அறிவுறுத்தல்



பொங்கல் பண்டிகையை சமத்துவம் நிறைந்த திராவிட பொங்கலாக கொண்டாட வேண்டும் என்று தொண்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து திமுக தலை வரும், முதல்வருமான ஸ்டாலின் தொண்டர்களுக்கு எழுதிய புத்தாண்டு வாழ்த்து மடலில்,

“இந்த புத்தாண்டு நமது தொண்டர்களுக்கு வெற்றிக்கான புத்தாண்டு. நான் கொடுத்த வாக்குறுதியில் இருந்து ஒருபோதும் பின்வாங்க மாட்டேன். எந்தக் கோரிக்கையாக இருந்தாலும் அதை கவனத்தில் கொண்டு பரிசீலித்து நிறைவேற்றுவதற்கான காலம் நிச்சயம் கனியும் தமிழகத்தில் எதிர்க்கட்சி சரணாகதி அடைந்து சாய்ந்து கிடக்கிறது. ஆளுங்கட்சியான தி.மு.கதான் தமிழகத்தை வஞ்சிக்கும் மத்திய அரசுடன் தொடர்ந்து உறுதியாக போராடி வருகிறது.

இந்திய ஜனநாயகத்தின் பாதுகாவலனாக தி.மு.க. முன்னிற்கிறது. அதைச் சிதறடிக்க வேண்டுமென எதிரிகளும், உதிரிகளும் வகுக்கும் வியூகங்களை தகர்த்தெறிவோம். தேர்தல் முடியும்வரை நமக்கு ஓய்வில்லை.கட்சியின்வெற்றிக்குஉழைப்புத் தான் அவசியம். வரும் பொங்கல் திருநாளை கட்சி சார்பில் ‘திராவிடப் பொங்கல்’ விழாவாக முன்னெடுக்க வேண்டும். மாநிலம் முழுவதும் 3 கட்டங்களாக விளையாட்டுப் போட்டிகள் நடத்த வேண்டும். முதல்கட்டமாக ஒன்றிய அளவிலான போட்டிகள் ஜனவரி 3 முதல் 9 ஆம் திகதி வரை நடத்த வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யா நிச்சயம் வெற்றி பெறும்

## புத்தாண்டு உரையில் புடின் உறுதி



உக்ரைன் ரஷ்யா இடையிலான போரில் ரஷ்யா நிச்சயம் வெற்றி பெறும் என்று 2026ம் புத்தாண்டு உரையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் 2026 ஆம் ஆண்டு புத்தாண்டு விழாவை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு தனது புத்தாண்டு வாழ்த்தினை தெரிவித்துள்ளார்.

இந்த புத்தாண்டு உரையில், உக்ரைன் போரில் ரஷ்யா நிச்சயம் வெற்றி பெறும் என்று புடின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும் தன்னுடைய உரையில் நாட்டு மக்களுக்காக போராடும் ராணுவ வீரர்களை நம்முடைய நாயகர்கள் என்று குறிப்பிட்டு புடின் வெகுவாக பாராட்டினார்.

அத்துடன், நாங்கள் உங்கள் மீதும் நம்முடைய வெற்றியின் மீதும் மிகுந்த நம்பிக்கை கொண்டிருப்பதாக கூறிய புடின், புத்தாண்டில் இராணுவ வீரர்களுக்காக ரஷ்ய குடிமக்கள் வேண்டிக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

கிட்டத்தட்ட 4 ஆண்டுகளாக நடைபெற்று வரும் போரில் ரஷ்யா தன்னுடைய இலக்குகளை அடைந்து நிச்சயம் வெற்றி பெறும் என்றும் புடின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

1999 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி ரஷ்ய ஜனாதிபதி பதவியில் இருந்து போரிஸ் யெல்ட்சின் விலகியை தொடர்ந்து, தற்செயலாக புடின் ரஷ்யாவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றார்.

அன்று அதிகாரத்திற்கு வந்த புடின் இன்றுடன் தன்னுடைய 26 ஆண்டுகால ஆட்சியை நிறைவு செய்கிறார்.




# முக்கிய நகரங்களிலிருந்து வெளியேறுகின்றனர் அமெரிக்க தேசிய பாதுகாப்புப் படை வீரர்கள்

அமெரிக்காவின் சிகாகோ மற்றும் லொஸ் ஏஞ்சல்ஸ் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் நிலைநிறுத்தப்பட்டிருந்த தேசிய பாதுகாப்புப் படை வீரர்களை மீளப் பெறுவதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

உள்நாட்டுப் பாதுகாப்புப் பணிகளில் வீரர்களைப் பயன்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தை உயர் நீதிமன்றம் கட்டுப்படுத்தியதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகக் கட்சியினர் ஆளும் நகரங்களில், குற்றங்களைக் கட்டுப்படுத்தவும், சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்கவும் தேசிய பாதுகாப்புப் படை வீரர்களை ட்ரம்ப் நிலை நிறுத்தினார்.

வழக்கமாக மாநில ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்த வீரர்களை, ஜனாதிபதி தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தது பெரும் சட்டப் போராட்டங்களுக்கு வழிவகுத்தது.

கடந்த வாரம் இது தொடர்பான வழக்கை விசாரித்த அமெரிக்க உயர் நீதிமன்றம், சிகாகோவில் உள்நாட்டுச் சட்ட அமுலாக்கப் பணிகளுக்காக தேசிய பாதுகாப்புப் படை பயன்படுத்த ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என்று தீர்ப்பளித்தது.

இதனைத் தொடர்ந்து, லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலும் வீரர்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சட்ட முயற்சியை ட்ரம்ப் நிர்வாகம் நேற்று மீளப் பெற்றது.

தனது 'ட்ரூத் சோஷியல்' தளத்தில் இது குறித்து பதிவிட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப்,

"உயர் நீதிமன்றத் தீர்ப்பால் தற்போது வீரர்களைத் திரும்பப் பெறுகிறோம்.

ஆனால், நகரங்களில் மீண்டும் குற்றங்கள் அதிகரிக்கும் போது, நாங்கள் இன்னும் மாறுபட்ட மற்றும் வலிமையான வடிவத்தில் மீண்டும் வருவோம்." எனத் தெரிவித்துள்ளார்.

ட்ரம்பின் இந்த அறிவிப்பை ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் வரவேற்றுள்ளனர். தற்போது சிகாகோ, போர்ட்லேண்ட் மற்றும் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரங்களில் இருந்து தேசிய பாதுகாப்புப் படை வீரர்கள் வெளியேறினாலும், தலைநகர் வொஷிங்டன் மட்டும் காவல்துறை பணிகளுக்கு உதவியாகத் தேசிய பாதுகாப்புப் படை வீரர்கள் தொடர்ந்து ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.




# புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் 10 பேர் பலி

சுவிட்சர்லாந்தின் புகழ்பெற்ற "கிரான்ஸ்-மொன்டானா" பனிச் சறுக்கு சுற்றுலாத் தளத்தில் உள்ள மதுபான விடுதியொன்றில் ஏற்பட்ட பாரிய வெடிப்புச் சம்பவத்தில் குறைந்தது 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தாண்டு கொண்டாட்டங்கள் களைகட்டியிருந்த நிலையில், உள்ளூர் நேரப்படி அதிகாலை 1:30 அளவில் வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள உறுதிப்படுத்தப்படாத காணொலிகளில், புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த உணவகம் தீப்பற்றி எரிவதைக் காண முடிகிறது.

கிரான்ஸ்-மொன்டானா பகுதி தற்போது முழுமையாக மூடப்பட்டு, வான் வழிப் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்காக விசேட உதவி மையத்தை பொலிஸார் அமைத்துள்ளனர்.

சுவிட்சர்லாந்தின் தலைநகரான பேர்ண் நகரிலிருந்து சுமார் இரண்டு மணிநேரப் பயண தூரத்தில், ஆல்ப்ஸ் மலைத்தொடரின் மத்தியில் இந்த ஆடம்பர பனிச்சறுக்கு சுற்றுலாத் தளம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



கனடா முரசு

பக்கங்கள் - 02

வியாழக்கிழமை 01/01/2026


**கனடாவில் 2026இல் 10 லட்சம் இந்தியர்கள் சட்டவிரோத குடியேறிகளாகும் அபாயம்**








# கனடாவின் கல்கரி நகரில் ஏற்பட்ட குழாய் வெடிப்பால் கடும் வெள்ளம்

கனடாவின் கல்கரி நகரில் உள்ள போனெஸ் பகுதியில் ஏற்பட்ட ஒரு பெரிய குடிதண்ணீர் குழாய் வெடிப்பு காரணமாக அப்பகுதியில் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை,இந்தவெள்ளத்தில் சிக்கிய 13 நபர்களை தீயணைப்பு வீரர்கள் பத்திரமாக மீட்டுள்ளனர்.

இதன் காரணமாக, அப்பகுதியில் உள்ள பல குடியிருப்புகளுக்கு முன்னெச்சரிக்கையாக தண்ணீரை கொதிக்கவைத்து குடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த பாதிப்பு கடந்த ஜூன் மாதம் ஏற்பட்ட மற்றொரு பெரும் குழாய் சேதத்தை நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளதாக அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, தற்போது பாதுகாப்பு கருதி அப்பகுதியில் உள்ள முக்கிய நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன, மேலும் சேதத்தை சீரமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இச்சம்பவத்திற்கான மூலக் காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என்றாலும், நிலைமையை சீராக்க மாநகராட்சி ஊழியர்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.





# கனடாவின் கடற்படை பயங்கரவாத அமைப்பு

## ஈரான் அதிரடி அறிவிப்பு

ஒட்டாவாவின் தீவிரவாதக் குழுக்களின் பட்டியலில் ஈரானிய இராணுவக் கிளையைச் சேர்க்கும் முடிவுக்கு பதிலளிக்கும் விதமாக, கனடாவின் கடற்படையை ஒரு பயங்கரவாத அமைப்பாக தெஹ்ரான் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள ஈரானிய வெளியுறவு அமைச்சு, கனடாவின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையை பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்டது சர்வதேச சட்டத்தை மீறும் செயல் என்று குற்றாம் சாட்டியுள்ளது.

இஸ்லாமிய புரட்சிகர காவல்படையை அமெரிக்கா பயங்கரவாத அமைப்பாக அறிவித்த பின்னர் நிறைவேற்றப்பட்ட 2019 ஈரானிய சட்டம், வொஷிங்டனின் வழியைப் பின்பற்றும் நாடுகளுக்கு எதிராக பரஸ்பர நடவடிக்கை எடுக்க அங்கீகாரம் அளிக்கிறது என்பதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

ஒட்டாவாவின் ரோயல் கனடிய கடற்படையை இந்தச் சட்டத்தின் எல்லைக்குள் வருவதாகக் தெஹ்ரான் கருதுவதாகவும், இதன் விளைவாக, அதை ஒரு பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்துவதாகவும் அறிக்கை கூறுகிறது.



# கனடாவில் 2026இல் 10 லட்சம் இந்தியர்கள் சட்டவிரோத குடியேறிகளாகும் அபாயம்

கனடாவில் வேலை அனுமதி (Work Permit) காலாவதியாகும் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், சட்டபூர்வமான நிலையை இழக்கும் புலம்பெயர்ந்தவர்கள் பெருமளவில் உருவாகி வருகின்றனர்.

2025 இறுதிக்குள் சுமார் 10,53,000 வேலை அனுமதிகள் காலாவதியான நிலையில், 2026-ல் மேலும் 9,27,000 அனுமதிகள் முடிவடைய உள்ளன.

இந்த வேலை அனுமதி (Work Permit) காலாவதியானவர்களில் குறைந்தது பாதி பேர் இந்தியர்கள் என மதிப்பிடப்படுகிறது.

ஆ ளைளளைளயரபய-வில் உள்ள குடிவரவு ஆலோசகர் கன்வர் சீரா குறிப்பிடுகையில், "2026 நடுப்பகுதிக்குள் கனடாவில் குறைந்தது 20 லட்சம் சட்டவிரோத குடியேற்றிகள் உருவாகலாம். அதில் இந்தியர்கள் மிகப்பெரிய பங்கை வகிப்பார்கள்." என தெரிவித்துள்ளார்.

கனடா அரசு, தற்காலிக புலம்பெயர்வை (TemporaryImmigration) குறைப்பதில் தீவிரமாக செயல்படுகிறது.

சர்வதேச மாணவர்கள், தற்காலிக தொழிலாளர்கள் ஆகியோருக்கான வாய்ப்புகள் குறைக்கப்பட்டுள்ளன.

புகலிட (Asylum) விண்ணப்பங்கள் பெருமளவில் நிராகரிக்கப்படுகின்றன.

புசநயவநச வழசழவெழ யுசநய (GTA) பகுதிகளில், சட்டபூர்வநிலையை இழந்தவர்கள் காட்டுப்பகுதிகளில் கூடாரங்கள் அமைத்து வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

சிலர் கணக்குகளில் வராமல் கையில் பணம் வாங்கிக்கொண்டு வேலைகள் செய்து வருகின்றனர்.

"Marriage of convenience" எனப்படும் போலி திருமணங்கள் மூலம் சட்டபூர்வ நிலையைப் பெற முயற்சிகள் நடக்கின்றன.

Naujawan Support Network போன்ற தொழிலாளர் உரிமை அமைப்புகள், ஜனவரியில் போராட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளன. இவர்களின் கோஷம்: "Good enough to work, good enough to stay" - வேலை செய்யத் தகுதியானவர்கள், இங்கே தங்கவும் தகுதியானவர்களே என்பதே இதன் பொருள்.

# அமெரிக்கப் பாணியில் பாதுகாப்புக் கொள்கைகளை கடைப்பிடிக்க வலியுறுத்துகிறார் இரும்பு மனிதன்

கனடாவின் இரும்பு மனிதன் (Man of Steel) என அழைக்கப்படும் பில்லியனர் பாரி சேக்ல்மேன், கனடா பிரதமர் மார்க் கார்னி அமெரிக்கா பாணியில் பாதுகாப்பு கொள்கைகளை (US-style protectionism) கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

சேக்ல்மேன் கூறியதாவது, "அமெரிக்கா 50 சதவீதம் எஃகு இறக்குமதி வரி விதித்ததால், கனடாவின் 15 பில்லியன் கனேடிய டொலர் மதிப்புள்ள எஃகு துறை சிதைவடைந்துள்ளது.

90 சதவீத ஏற்றுமதி அமெரிக்காவுக்கு செல்லும் நிலையில், ஆயிரக் கணக்கான வேலைவாய்ப்புகள் ஆபத்தில் உள்ளன" என்று கூறியுள்ளார்.

Algoma Steel நிறுவனம் சமீபத்தில் 1,000 பணியாளர்களை நீக்கியது. ஏற்கனவே 40 சதவீதம் ஏற்றுமதி குறைந்துள்ளதாக Statistics Canada தெரிவித்துள்ளது.



இதனால், கனடா அரசு Buy Canadian என்ற பிரச்சாரத்தை தொடங்கி, உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க முயற்சிக்கிறது.

ஆனால், "கனடா சீனா, ஜப்பான், துருக்கி, வியட்நாம் போன்ற நாடுகளுக்கு திறந்த பின்வாசலாக உள்ளது. அமெரிக்கா தனது காலால் கனடாவின் கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கிறது. இதை நிறுத்த, கனடா அனைத்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை கிழித்து, தன் துறையை பாதுகாக்க வேண்டும்" என சேக்ல்மேன் கூறியுள்ளார்.

இதற்கு பதிலளித்த கனடா தொழில் அமைச்சர் மெலானி ஜோலி, "சேக்ல்மேன், பாதுகாப்பு கொள்கைகளை வலியுறுத்துவதற்குப் பதிலாக, ஒட்டாவா மற்றும் வெள்ளை மாளிகை இடையே நம்பிக்கையை உருவாக்க வேண்டும்" எனக் கூறியுள்ளார்.

சேக்ல்மேன், வட அமெரிக்காவின் மிகப்பெரிய எஃகு குழாய் உற்பத்தியாளராக, 4 பில்லியன் டொலர் விற்பனை வலுவுடன் செயல்படுகிறார். அவர், "உலகம் மாறிவிட்டது. அமெரிக்கா விரைவில் ஐரோப்பாவுக்கு எஃகு ஏற்றுமதி செய்யும்" எனக் கூறியுள்ளார்.